Jaffna University International

Research Conference - 2014

"Accelerated Regional Development"

JUICE

2014

# CONFERENCE PROCEEDINGS

Edited by:
Abyerami Sivaruban
Kanthasamy Kajavinthan

December 18-19, 2014

University of Jaffna, Sri Lanka

Jaffna University International Research Conference 2014 (JUICE - 2014)
ISSN No: 2279 - 1922

**Manuscripts**

| | |
|---|---|
| Received upto | : 10th August, 2014 |
| Notification of acceptance | : 15th September, 2014 |
| Acceptance of revised papers | : 10th November, 2014 |
| Published | : 18th December, 2014 |

**Editorial Board**

| | |
|---|---|
| Editor-in-Chief | : Prof. G. Mikunthan and Dr. K. Suthakar |
| Editors | : Dr. (Mrs) A. Sivaruban and Dr. K. Kajavinthan |

**Person-in-Charge of the tracks**

| | |
|---|---|
| Dr. K. Sooriyakumar | - Agriculture |
| Dr. T. Ketheesan | - Applied Sciences and Technology |
| Mrs. S.M. Alocious | - Commerce and Management |
| Dr. (Mrs) A. Sathiyaseelan | - Education |
| Dr. T. Mangaleswaran | - Entrepreneurship |
| Prof. (Mrs) S. Kuganathan | - Fisheries Science |
| Dr. S. Vasantharuba | - Food and Nutrition |
| Dr. N. Surendrakumaran | - Health and Medical Sciences |
| Mr. E. Cumaran | - Humanities and Fine Arts |
| Mr. K. Sarveswaran | - Information Sciences and Technology |
| Prof (Mrs) M. Senthilnanthanan | - Pure Science |
| Dr. S. Vijayakumar | - Regional Science |
| Dr. S. Santhirasegaram | - Social Sciences |

**Cover page Design** : Mr. S. Shriparen and Mr. K. Sarveswaran

**Disclaimer**

The full papers published in this proceeding are the views expressed by the respective authors. The statements and opinions stated in these publications do not necessarily reflect the views of the editorial Board of the Jaffna University International Research Conference-2014.

© JUICE 2014,University of Jaffna, Sri Lanka.
URL : www.jfn.ac.lk/juice2014
Printed by : **"Andra Printers"**, No.356A, Kasthuriyar Road, Jaffna. T.P: 021 221 7279



# Message from the Chairperson of the University Grants Commission

It is my pleasant duty to release this message for the Jaffna University 2nd International Research Conference (JUICE 2014) on "Accelerated Regional Development" organized by the University of Jaffna, Sri Lanka.

I am glad to note that University of Jaffna, Sri Lanka has organized this remarkable event in Sri Lanka with the aim of bringing expertise across the globe on a common platform to discuss and share research findings in relevant fields focusing the conference theme. In addition, the e-conference on 'Accelerated development of Northern and Eastern Provinces of Sri Lanka' held during July 2014 has provided great opportunity to the international and local participants to share their valuable contribution on this specific theme.

Conferences of this nature provides an excellent opportunity to the local scientists to share and acquire new knowledge, research skills and technologies obtained through research worldwide. The Sri Lankan government recognizes the importance of improving research skills to the academia and researchers in Sri Lanka to present their findings and this could make a significant contribution to the national development by taking the knowledge and technologies to establish and strengthen local industries. The pivotal role of the academics of universities is knowledge generation, dissemination and solves the major issues of the area thereby enabling the community to uplift their lives with available local resources.

As the Chairperson of the University Grants Commission in Sri Lanka, I wish to extend a warm welcome to the international participants to this Conference. I am sure that you will have a happy, productive and a memorable stay in our beautiful country. I am sure the interaction with international participants will strengthen the collaborative researches and discussions between the scholars of University of Jaffna and their respective counter parts in other Universities would be a win-win situation.

I also wish the organizing committee, the scholars, the distinguished guests and students a very productive conference towards the national development.

Finally, I wish to thank the Conference Chair and Vice-Chancellor Professor Vasanthy Arasaratnam, Co-chairs Professor G. Mikunthan and Dr.K.Suthakar and members of the organizing committee, academics, the other staff and students for their dedication and co-operation in organizing an international conference on a highly relevant theme.

**Professor Kshanika Hirimburegama**
Chairperson
University Grants Commission.

# யாழ்ப்பாணப் பெண்களது சமூகமுன்னேற்றத்தில் அமெரிக்க மிஷனின் வகிபாகம் - கல்விப்பணியை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு

*க.அருந்தவராஜா[a], க.ஜெயதீஸ்வரன் [b],
[a]வரலாற்றுத்துறை, கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
[b]வரலாற்றுத்துறை, கலைப்பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்.
*arunn.msu@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

மதம் பரப்பும் நோக்குடன் இலங்கைக்கு வருகைதந்த அமெரிக்கமிஷனரியினர் யாழ்ப்பாணத்தில்தமதுபணிகளை முன்னெடுத்துவந்த வேளையில் யாழ்ப்பாணப் பெண்கள் சமூகரீதியில் கல்வியறிவில்லாது பின்தங்கியிருந்ததை அவதானித்து அவர்களுக்கு கல்வியறிவை வழங்குவதில் கவனம் செலுத்தத்தொடங்கினர். இதன்பொருட்டு யாழ்ப்பாணத்தில் பல பாடசாலைகளையும், மகளிர் விடுதிப் பாடசாலைகளையும் நிறுவிப் பணியாற்றினர். இவற்றின் மூலமாக வழங்கப்பட்ட கல்வியால் பெண்கள் சமூகரீதியில் முன்னேற்றமடைவதற்கான வாய்ப்பைப் பெற்றுக்கொண்டனர். இவர்களது இத்தகைய கல்விப் பணிகளைத் தொடர்ந்தே பிற மிஷனரிகளும், சுதேசிகளும் இவ்விடயத்தில் கவனம் செலுத்தத் தொடங்கினர். இவர்கள் ஏனைய ஐரோப்பியர்களைப் போன்று மதத்தினைப் பரப்புவதனை அடிப்படையாகக் கொண்டிருந்தாலும் அவற்றில் சமூக நோக்கமும் தாராளமாகக் காணப்பட்டது. இப்பின்னணியில் யாழ்ப்பாணப் பெண்களது கல்வி மேலும் வளர்ச்சி பெறவும் சமூகரீதியில் முன்னேற்றம் பெறவும் காரணமாக இந்நிறுவனம் அமைந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வகையில் யாழ்ப்பாணப் பெண்கள் சமூக முன்னேற்றம் பெறுவதற்கு காரணமான கல்விப் பணியை ஆரம்பித்தவர்கள் என்ற வகையில் அமெரிக்க மிஷனரியினரது பங்களிப்பு குறிப்பிட்டுச் சொல்லும் வகையில் காணப்படுகின்றதெனலாம்.

யாழ்ப்பாணப் பெண்களின் கல்வியறிவு வளர்ச்சியடைவதற்கு ஆரம்பத்தை வழங்கியவர்கள் அமெரிக்கமிஷனரியினர் என்பதை வெளிப்படுத்துவதும், இவர்களது கல்விப் பணியானது மதநோக்கம் கருதியதெனினும் அதில் சமூகநோக்கமே மேலோங்கிக் காணப்பட்டதென்பதனைத் தெளிவுபடுத்துவதும் இவர்களது கல்விப்பணிகள் பற்றிய விபரங்களை பிற்காலச் சந்ததியினர் அறியும் நோக்கில் அவற்றினை ஆவணப்படுத்துவதுமே ஆய்வின் பிரதான நோக்கமாகும். வரலாற்று அணுகுமுறையினடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்ற இவ்ஆய்வில் முதலாம் தரத் தரவுகளாக அமெரிக்கமிஷனரியினரது குறிப்புக்கள், ஆண்டறிக்கைகள், உதயதாரகைப் பத்திரிகை தரும் தகவல்கள் போன்றன பயன்படுத்தப்பட்டுள்ளன. இரண்டாந்தரத் தரவுகளாக சம்பந்தப்பட்டவர்களுடனான நேர்காணல்கள், முதற்தரத் தரவுகளை அடிப்படையாக வைத்துப் பின்னாளில் எழுதப்பட்ட நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள், சஞ்சிகைகள், இணையத் தகவல்கள் போன்றன பயன்படுத்தப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தரசர்களது காலத்திலிருந்து தொடர்ந்துவந்த போர்த்துக்கேயர், ஒல்லாந்தரது காலம் வரை பெண்கல்வியென்பது யாழ்ப்பாணத்தில் முன்னேற்றமடையாததொரு நிலையிலேயே காணப்பட்டது. ஆனால் பின்வந்த ஆங்கிலேயராட்சியில் அமெரிக்கமிஷனரி அமைப்பு வழங்கிய கல்வியானது சமூகத்தில் யாழ்ப்பாணப் பெண்களது நிலையினை உயர்த்தியதென்பதில் இரு வேறுபட்ட கருத்துக்களுக்கு இடமில்லை.

**திறவுச் சொற்கள்-** பெண்கல்வி, விடுதிப்பாடசாலைகள், அமெரிக்கமிஷன், சமூகநோக்கு

## 1. ஆய்வு அறிமுகம்

யாழ்ப்பாண வரலாற்றில் அமெரிக்க மிஷனரியினரது வருகை அரசியல், பொருளாதார, சமய, சமூக நிலைகளில் புதிய காலகட்டத்தின் தொடக்கமாகப் பார்க்கப்படுகின்றது. புரட்டஸ்தாந்து மதத்தைப் பரப்புவதற்கு வருகைதந்த இவர்கள் தமது நோக்கத்தை

அடைவதற்கான கருவிகளாக கல்வி, வைத்திய, அச்சுப்பணிகளை முன்னெடுத்து வந்தனர். இவர்கள் முன்னெடுத்துவந்த இப்பணிகளில் ஒன்றான கல்விப்பணி மதநோக்கம் கருதியதாக இருந்தாலும் ஒட்டுமொத்த யாழ்ப்பாண மக்களது சமூகமும் முன்னேற்றமடையும் வகையிலேயே அமைந்திருந்தது. ஏனெனில் இவர்களது கல்விப் பணிகள் மூலமாகவே மேலைத்தேய கல்வி முறைகளான பாடசாலைக்கல்வி, ஆங்கிலக்கல்வி, உயர்கல்வி, என்பவற்றை யாழ்ப்பாணத்தவர் பெற்றதுடன் பெண்களது கல்வி தொடர்பான விழிப்புணர்வையும் அவர்கள் பெற்றுக்கொண்டனர். யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் கல்விப் பணியை ஆரம்பித்த இவர்கள் கல்வி நிலையில் பெண்கள் பின்தங்கி இருந்ததை அவதானித்து பெண்களது வாழ்வை வளம்படுத்தும் வகையில் அவர்களுக்கு கல்வி அறிவை ஊட்டுவதில் கவனம் செலுத்தத் தொடங்கினர் (நேர்காணல்:செபமாலை.ச). அதில் பெருமளவிற்கு வெற்றியும் பெற்றனர். இதற்காக யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் பாடசாலைகள் விடுதிப் பாடசாலைகள் போன்றவற்றினை நிறுவி அவற்றினூடாகக் கல்வி போதித்துவந்ததுடன் யாழ்ப்பாணத்துப் பெண்கள் சமூகரீதியில் முன்னேறுவதற்கான வாய்ப்பையும் வழங்கி வந்தனர். அமெரிக்கமிஷனரியினர் பெண்கள் வாழ்வை வளமாக்கும் நோக்குடன் ஆரம்பித்த கல்விப் பணிகளை அவர்களால் அமைக்கப்பட்ட பாடசாலைகள் இன்றும் யாழ் மண்ணில் முன்னெடுத்து மிஷனரியினரது பணிகளின் சிறப்பை பறைசாற்றிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## 2. அமெரிக்கமிஷனும் யாழ்ப்பாண வருகையும்

அமெரிக்க மிஷனரியினரது யாழ்ப்பாண வருகையானது தற்செயல் நிகழ்வொன்றின் மூலமே இடம்பெற்றது. அமெரிக்காவின் மசாசுசெற் மாநிலத்தில் 1810இல் தோற்றம் பெற்ற அமெரிக்கன்மிஷன் எனும் அமைப்பினர் புரட்டஸ்தாந்து கிறிஸ்தவத்தை கீழைத்தேசங்களில் பரப்பும் நோக்குடன் பல குழுக்களாகப் பிரிந்து பயணங்களை மேற்கொண்டிருந்தனர் [1]. அவர்களில் நியூஸ்வெல் என்பவரது தலைமையிலான அமெரிக்கமிஷனரியினர் இந்தியா நோக்கி பயணத்தை மேற்கொண்டு இந்தியாவை வந்தடைந்தனர். அவர்கள் இந்தியாவில் தமது பணிகளை மேற்கொள்வதற்கு அக்காலப்பகுதியின் சூழ்நிலை சாதகமாக அமையாத காரணத்தினால் அங்கிருந்து மொறிசியஸ் நோக்கித் தமது பயணத்தை மீள ஆரம்பித்தனர். இப்பயணத்தின்போது இடையில் அவர்களுக்கு ஏற்பட்ட துன்பியல் நிகழ்வொன்றின் காரணமாக 1813இல் இலங்கையை வந்தடைந்தனர். அப்போது இலங்கையின் தேசாதிபதியாக இருந்த றொபேட் பிறவுண்றிக் அவர்களை வரவேற்றதுடன் அவர்களது பணியினை யாழ்ப்பாணத்தில் மேற்கொள்வதற்கான அனுமதியினையும் வழங்கினார். யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்த நியூஸ் வெல் தலைமையிலான மிஷனரியினர் சுமார் ஒன்றரை மாதகாலம் அங்கு பணியாற்றியபின் தமது சேவையினை மேலும் விஸ்தரிக்கும் நோக்குடன் அமெரிக்காவிலுள்ள தமது தலைமையகத்திற்கு ஆளணி உதவிகோரி வேண்டுகோள் அழைப்பு விடுத்ததையடுத்து மிஷன் தலைமையகம் மிஷனரி அணியினரை அனுப்பிவைத்தது. அவ்அணியினர் 1816 இல் யாழ்ப்பாணத்தை வந்தடைந்தனர். இவர்கள் யாழ்ப்பாணம், தெல்லிப்பளை, வட்டுக்கோட்டை ஆகிய பகுதிகளில் குடியேறித் தமது பணிகளைத் தொடர்ந்து முன்னெடுத்து வந்தனர். இக்குழுவில் வருகைதந்து பணியாற்றியவர்களில் வணக்கத்திற்குரிய டானியல் பூவர், ஜேம்ஸ் றிச்சேட்ஸ், வண. ஏட்வேட் வாரன் ஆகியோர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களது வருகையைத் தொடர்ந்து பல மிஷன்களது வருகையும் காலத்திற்குக் காலம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுவந்ததுடன் அவர்களது பணிகளும் அப்பகுதிகளில் விஸ்தரிக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

## 3. அமெரிக்கமிஷனரியினரது வருகையின் முன்னரான யாழ்ப்பாணப் பெண்களது கல்விநிலை

யாழ்ப்பாணத்தவர் பின்பற்றிய கல்விமரபானது நீண்டகால வரலாற்றைக் கொண்டதுடன் இந்துக்கல்விப் பாரம்பரியத்தினூடாகவே அது வளர்த்தெடுக்கப்பட்டு வந்ததையும் அறியமுடிகின்றது. யாழ்ப்பாணத்தவர் ஆரம்ப காலத்தில் பின்பற்றிவந்த கல்விமுறையானது நியமன ரீதியானதாக காணப்படவில்லை. ஆண், பெண் என்ற வித்தியாசமின்றி அவர்கள் தொழில்நுட்பம்சார் அறிவைப் பெற்றிருந்தனர். காலம் காலமாக வளர்ந்துவந்த மருத்துவம், சோதிடம், விவசாயம் ஆகிய துறைகளில் அக்குடும்பத்தைச் சேர்ந்த பெண்களும் புலமை பெற்றிருந்தனர். இதற்கு ஆதாரமாகப் பெண்கள் மருத்துவிச்சிகளாக இருந்து பெண்களுக்கான மருத்துவத்தை மேற்கொண்டு வந்ததையும், சோதிடத்தில், விவசாய நடவடிக்கைகளின் போது காவற்கடமைகளில் ஈடுபட்டு அவர்கள் வந்ததையும் குறிப்பிடலாம். பிற்காலத்தில் இலக்கணம், இலக்கியம், சமயம், ஆகியவற்றில் புலமை பெற்றுத் திகழ்ந்தவர்கள் தமது வீட்டிலோ அல்லது திண்ணைப் பள்ளியிலோ

குரு-சிஷ்ய முறைப்படி ஆண்களுக்குக் கல்வி போதித்து வந்தனர். இவர்களது வீடுகளில் வாழ்ந்த பெண்கள் சிறிதளவில் எழுத்தறிவைப் பெற்றிருந்திருக்கலாமென ஊகிக்கலாம். எனினும் இக்காலத் திண்ணைப்பள்ளிகளில் இவர்கள் கல்வி கற்றார்கள் என்பதற்கான ஆதாரங்கள் எவையும் கிடைக்கவில்லை. எனினும் யாழ்ப்பாணத்தவர் பேணிவந்த கல்விமரபை யாழ்ப்பாணத்தரசர் காலத்திலிருந்து ஆதாரபூர்வமாக அறியக்கூடியதாக இருப்பதால் அக்காலத்திலிருந்த பெண்களது கல்விநிலை பற்றித் தொடர்ந்து வந்த ஐரோப்பியர் காலத்தினூடாகவும் அறிய முடிகின்றது.

## 4. யாழ்ப்பாணத்தரசர் காலத்தில் பெண்களது கல்வி நிலை

காலம் காலமாக வளர்த்தெடுக்கப்பட்டுவந்த யாழ்ப்பாணத்தவரது கல்வி மரபானது யாழ்ப்பாணத்தரசர் காலத்தில் பெருவளர்ச்சி பெற்றிருந்ததென்பதை அக்காலத்தில் தோற்றம்பெற்ற சோதிட, வைத்திய நூல்களின் மூலம் அறியமுடிகின்றது. இக்காலத்தில் ஆட்சிபுரிந்த மன்னர்கள் தமிழ்நாட்டுடன் நல்லுறவைப் பேணியதனால் அங்கிருந்து சிறந்த அறிஞர்களை வரவழைத்துப் பல நூல்களைப் படைத்து யாழ்ப்பாணக் கல்விமரபை வளர்த்தெடுத்து வந்தனர் (நேர்காணல்:கிருஸ்ணராசா). அதேவேளை தமிழ்மொழிக் கல்வியுடன் வடமொழிக் கல்வியும் சிறந்து விளங்கியிருந்தது. இதற்கு எடுத்துக்காட்டாக வடமொழியில் இருந்த இரகுவம்சம் எனும் காவியம் அரசகேசரி எனும் அரசகுடும்பத்தைச் சேர்ந்த கவிஞனால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இவை தொடர்பாகப் பிற்காலத்தில் தோற்றம் பெற்ற இலக்கியங்களான யாழ்ப்பாண வைபவமாலை. யாழ்ப்பாண வைபவகௌமுதி. கைலாயமாலை முதலிய நூல்களில் குறிப்பிட்டிருப்பதன் மூலம் அறிய முடிகின்றது. யாழ்ப்பாணத்தரசர்கள் தமிழ்ச்சங்கம் ஒன்றை நிறுவியும் சரஸ்வதி மகாலயம் எனும் நூல்நிலையத்தை அமைத்தும் யாழ்ப்பாணக் கல்விமரபை வளர்த்துவந்ததைக் காணலாம்

யாழ்ப்பாணத்தரசர்கள் காலத்தில் பெண்கள் சமூக நிலையில் ஓரளவு உயர்ந்த நிலையை அடைந் திருந்தார்கள் என்பதை வரலாற்றாசிரியர் செ.இராசநாயகம் முதலியாருடைய யாழ்ப்பாணச் சரித்திரம் எனும் நூலின் மூலம் அறியமுடிகின்றது. இக்காலத்தில் பெண்கள் சிறந்த அரசிகளாகவும். காப்பரசிகளாகவும் இருந்தார்கள் எனவும் அவர்கள் நல்ல சமூகப் பழக்க வழக்கமுடையவராகி விருந்தோம்பி வாழ்ந்தார்கள் என்பதனையும் அறிந்துகொள்ள முடிகின்றது. இவரது கூற்றை நோக்கும்போது அக்காலத்தில் அரசகுலப் பெண்கள். உயர் குடும்பப்பெண்கள் போன்றவர்கள் கல்வியறிவு பெற்றிருக்கலாம் என எண்ணத் தூண்டுகின்றது.

## 5. போர்த்துக்கேயர் காலத்தில் பெண்களது கல்வி நிலை

போர்த்துக்கேயப் பண்பாட்டம்சங்கள் ஆரம்பத்தில் பெண்களது கல்வி வளர்ச்சியில் மாற்றங்களை ஏற்படுத்தியதைவிட யாழ்ப்பாணப் பெண்களுக்கு சமூக ரீதியில் அது சில சலுகைகளை வழங்கிவந்தமையே அதிகமாக இருந்தது. இதேவேளை இவர்கள் நிறுவிய கோவிற்பற்றுப் பாடசாலைகளில் ஆண்களுடன் சேர்த்து சிறுமிகளுக்கும் ஆரம்பக்கல்வி வழங்கப்பட்டு வந்தது. எட்டு வயதின்மேல் பெண்களைப் பாடசாலைக்கு அனுப்ப பெற்றோர் தயங்கியமையால் போர்த்துக்கேயரது காலத்தில் இரண்டாம் நிலைக்கல்வி இடம்பெறவில்லை. காலையில் ஆண்களுக்கும் மாலையில் பெண்களுக்கும் தேவாலயங்களில் சமய வகுப்புகள் நடைபெற்றன. இருப்பினும் பெண்களுக்கெனத் தனியான பாடசாலைகள் நிறுவப்பட்டு கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லையெ ன்பது கவனிக்கத்தக்கது.

போர்த்துக்கேயர் காலத்தில் அரச மற்றும் உயர்குலப் பெண்களுக்கு வழங்கப்படும் கல்விமுறை தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வந்ததை அறியமுடிகின்றது. குறிப்பாக யாழ்ப்பாண அரசின் கடைசி மன்னனான பரராஜசேகரனின் புத்திரிமார்கள் இருவர் கத்தோலிக்க மதத்திற்கு மாற்றப்பட்டு அவர்களுக்கு கல்வி போதிக்கப்பட்டமையினைக் குறிப்பிடலாம். தொடர்ந்து அவர்களுக்கு கோவாவில் கத்தோலிக்க நிறுவனமான மகிக்கல்லூரியில் கல்வி போதிக்கப்பட்டது. இப்பெண்கள் இருவருமே கல்வியின் பொருட்டு முதன் முதலாக யாழ்ப்பாணத்திலிருந்து வெளிநாடு சென்றவர்களாக இருக்கலாம் எனக்கருதப்படுகின்றது. பொதுவாக போர்த்துக்கேயர் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட கல்வி நடவடிக்கைகள் கத்தோலிக்க மதத்தை அடிப்படையாகக் கொண்டதாக இருந்தாலும் அதன் தாக்கம் பெண்களைப் பொறுத்தவரை சிறிய அளவிலேயே இடம்பெற்றிருந்தது. எனினும் எதிர்காலத்தில் பெண்கள் வாழ்வில் ஏற்பட இருக்கும் கல்விரீதியான மாற்றத்திற்கான ஆரம்பத்தை பறைசாற்றுவதாகவே அது அமைந்திருந்தது.

## 6. ஒல்லாந்தர் காலத்தில் பெண்களது கல்வி நிலை

ஒல்லாந்தரது காலத்தில் பெண்கள் வீட்டை விட்டு வெளியே வருவதென்பது இயலாத காரியமாக இருந்தது.

இதனால் ஒல்லாந்தரும் பெண்களது கல்வி தொடர்பாக எதுவித அக்கறையும் காட்டவில்லை. எனினும் வீட்டிற்குள் முடங்கியிருந்த பெண்களை மதமாற்றம் மூலம் வெளியே அழைத்து வந்து சமூக இயக்கத்திற்கேற்ப அவர்கள் தயாராவதற்கு இவர்கள் வழியமைத்துக் கொடுத்தனரென்பது குறிப்பிடத்தக்கது.

### 7. பிரித்தானியர் காலப் பெண்களது கல்வி நிலை

பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் வாழ்ந்த பெண்களது கல்விநிலை குறித்து அமெரிக்கமிஷனைச் சேர்ந்த மெக்ஸ் என்பவர் கூறும் போது "கோவில்களில் பாட்டுப் பாடி நாட்டியம் ஆடுகின்ற பெண்களைத்தவிர மற்றையோரில் தமிழை எழுதவாசிக்கத் தெரிந்த இரு பெண்களை மாத்திரம் யாழ்ப்பாணத்தில் கண்டதாகவும் அவர்களுள் ஒருத்தி அளவெட்டியைச் சேர்ந்தவள் எனவும் மற்றையவள் உடுப்பிட்டியைச் சேர்ந்தவள் எனவும் குறிப்பிட்டுள்ளார். இவரது குறிப்பின் மூலம் மிகவும் கீழ்நிலையிலேயே யாழ்ப்பாணப்பெண்களது கல்விநிலை காணப்பட்டதென்பதை அறியமுடிகின்றது. இவ்வாறான ஒரு சூழ்நிலையிலேயே மதப்பணி ஆற்றுவதற்குப் பல மிஷனரி அமைப்பினரது வருகை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றவேளை அம்மிஷனரிகளில் ஒன்றான அமெரிக் கமிஷனரியினர் மதப்பணியுடன் கல்விப்பணியையும் முன்னெடுத்து வந்தமை குறிப்பிடத்தக்கது. அதே வேளை பெண்களது கல்வி வளர்ச்சியில் அக்கறை செலுத்தி அவர்கள் வாழ்வில் பெருமாற்றங்கள் ஏற்படப் பணியாற்றியிருப்பதைக் காணலாம்.

### 8. அமெரிக்கமிஷனரியினரும் யாழ்ப்பாணப் பெண்களது கல்வி வளர்ச்சியும்

யாழ்ப்பாணத்தில் தமது மதப்பணியை முன்னெடுத்துவந்த அமெரிக்கமிஷனரியினர் அதற்கான கருவியாக கல்வியைக் கையாண்டு வந்ததனால் அவர்கள் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் பாடசாலைகளை நிறுவிக் கல்விப்பணியை முன்னெடுத்து வந்தனர். ஆரம்பத்தில் ஆண்களது கல்வியில் அக்கறை செலுத்திய இவர்கள் பின்னர் பெண்களது கல்வி வளர்ச்சியிலும் அக்கறை செலுத்தத் தொடங்கினர். இதற்குக் காரணம் மிஷனரிகளது மனைவியரதும், மிஷன் பெண் அங்கத்தவர்களதும் நடவடிக்கைகளே. யாழ்ப்பாணத்தில் பெரும்பாலானவர்கள் இந்துக்களாக இருந்ததனால் அவர்களது மரபின்படி பெண்பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுப்பி கல்வி கற்பிப்பது அக்காலப்பகுதியில் முறையற்ற செயலாகவே கருதப்பட்டுவந்தது. இவ்வாறான நிலைமையில் அவர்களிடமிருந்து எதிர்ப்புக்கள் வந்தபோதெல்லாம் அவற்றை பொறுமையுடன் சமாளித்துத் தமது பெண்கல்விப் பணியை தொடர்ந்து முன்னெடுத்து வந்தனர். இப்பின்னணியில் யாழ்ப்பாணத்தில் பெண்களது கல்வியானது படிப்படியாக வளர்ச்சியடைந்து வந்ததெனலாம்.

இவர்களது பெண்கல்வி முயற்சியின் ஆரம்பமாக வட்டுக்கோட்டையில் பணியாற்றி வந்த மிஷனரியினரது வீட்டிற்கு அண்மையில் இருந்த ஒரு முதலியாரின் பேத்தியாகிய சிறுமி 1817இல் மிஷனரியான றிச்சேட் அம்மையாரிடம் கல்விகற்ற நிகழ்வு கருதப்படுகின்றது. றிச்சேட் அம்மையார் அப்பெண்பிள்ளையைத் தனது கல்விப்போதனையின் மூலம் எழுத வாசிக்கக்கூடியவளாக மாற்றினார். அமெரிக்கமிஷனரியினர் முதன் முதல் கல்வி புகட்டிய உள்ளூர்ப் பெண்பிள்ளை இவளேயாவாள். மேலும் பெண்களுக்கு கல்வி புகட்ட வேண்டும் என்பதில் அக்கறை செலுத்திய மிஷனரியான திருமதி. பூவர் அம்மையார் ஊர்ஊராகச் சென்று பெண்கள் கல்வி தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்திவந்தார். அப்போது சில பெண்கள் ''அந்த விடயத்தை நீர் இங்கே பேசவேண்டாம். எமது நாட்டிலே பெண்கள் கல்வி கற்கும் வழக்கம் கிடையாது. அவர்கள் படிப்பறிவு பெற்றுவிட்டால் அவர்களை ஒருவரும் விவாகஞ் செய்துகொள்ளச் சம்மதிக்கார்கள்'' எனக் கூறியதாக வண. டானியல் பூவர் தனது குறிப்பில் குறிப்பிட்டுள்ளார். எனினும் பூவர் அம்மையார் பெண்களிடையே கல்வியறிவை வளர்க்க வேண்டும் என்பதற்காகத் தனது பணியை கைவிடாது தொடர்ந்தார்.

பெண்களது கல்விவளர்ச்சியில் அக்கறை செலுத்திய பூவர் அம்மையார் அவர்களைக் கவரும் வகையில் சில சலுகைகளை வழங்கித் தனது பணியை முன்னெடுத்துச் சென்றதைக் காணலாம். பூவர் அம்மையார் பெண்பிள்ளைகளுக்கு வேதப் புத்தகங்களைக் காட்டி ''நீங்கள் படித்துத்தேறி இந்தப் புத்தகத்தை வாசிக்கத்தக்கதாய் வந்தால் ஆளுக்கொவ்வொரு சிறுமணிக் கோவை செய்து தருவேன்'' எனக்கூறி பெண்பிள்ளைகளை கல்வியில் ஈடுபடுத்த முயற்சி செய்தார். மேலும் பெண் குழந்தைகள் கல்வி கற்க வேண்டும் என்பதற்காக இவர்கள் கல்வி பெறும் காலத்தில் அவர்களுக்கு இலவசமாக உணவு, உடை போன்றவற்றையும் வழங்கி வந்தனர். இவ்வாறு மிஷனரிகள் வழங்கிய ஊக்குவிப்புக்களால் பெண்கள் சிலர் கல்வி கற்கத் தொடங்கியதைக் கண்ட ஏனைய பெண்களும் கல்வி கற்கத் தொடங்கினர். இது தொடர்பாக

இந்துசாதனப் பத்திரிகை 1891 ஆம் ஆண்டு யூன் மாதக் குறிப்பில் பின்வருமாறு குறிப்பிட்டிருப்பதைக் காணலாம். "கிறிஸ்தவப் பாதிரிகள் இந்துச் சிறுமிகட்குத் தம் மதத்தை கொளுத்திவிட்டால் அவர்களும் அதைவிடாது பற்ற. அவர்களின் காரணமாக ஆடவர்களும் விடார்களென்று பெண்களுக்கு கல்வி கற்பித்தலாகிய வியாசத்தை முதலில் மேற்கொண்டார்கள். பெண்களுடைய அற்பக் கல்வியினால் வரும் பல கேடுகளை நன்கு அறிந்தும் அதனைச் சிறிது விரும்பினராயினும் அயல்வீட்டுப் பெண் படித்து எழுத வாசிக்கக்கூடியவளாக இருக்க நம்முடைய மக்கள் அவை அறியாதவளாய் இருப்பதென்னவென்று நம்மவர் ஒவ்வொருவராகத் தம் பெண்களைப் படிப்பிக்கத் தொடங்கினர்". பெண்பிள்ளைகள் கல்வி கற்பதில் ஆர்வம் காட்டிவருவதை அவதானித்த மிஷனரியினர் 1818இல் தெல்லிப்பளையில் ஐந்து பெண்கள் பாடசாலையை முதன் முதலாக நிறுவி பெண்களது கல்வி வளர்ச்சிக்கான ஆரம்பத்தை ஏற்படுத்தினர். இதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் அமைத்த இலவசப் பாடசாலைகளில் பெண்கள் இணையத்தொடங்கினர். இதனால் அப்பாடசாலைகளில் மாணவிகளின் வரவு அதிகரிக்கத் தொடங்கியதெனலாம்.

அமெரிக்கமிஷனரியினர் தம்மிடம் கல்விகற்ற பெண்களது கல்வி வளர்ச்சியில் கவனம் செலுத்திய அதேவேளை அவர்களது திருமண விடயங்களிலும் கவனம் செலுத்தியதால் பெண்கள் கல்வி தொடர்பான கருத்து மேலும் வலுப்பெறத் தொடங்கியது. இதற்கு எடுத்துக்காட்டாக 1822 ஆம் ஆண்டு அவரால் தெல்லிப்பளையில் மேற்கொள்ளப்பட்ட திருமணச்சடங்கு குறிப்பிடத்தக்கது. இவ்விவாகம் சாதிக்கட்டுப்பாட்டை மீறியவகையில் கல்வி அறிவுக்கு மட்டும் முக்கியத்துவம் வழங்குவதாக இருந்ததால் அனைவருமே அதிசயத்துடன் நோக்கியதாக சில குறிப்புகள் மூலம் அறியமுடிகின்றது. அக்குறிப்பில் "மணவாளனும் மணவாட்டியும் ஒரே சாதியராய் இராதபடியால் கண்டோர், கேட்போர் யாருடைய மனதிலும் மணவாளனுடைய இவ்விவாக ஒழுங்குகள் பழைய வழக்கங்களுக்கும் சாதிக்கட்டுபாட்டிற்கும் முழு விரோதமாயிருந்தன" மேலும் "இந்த வாலிபன் சுற்றத்தார் கவனித்தபடி சாதியையும் சீதனத்தையும் கவனித்திலன். மணமகன் சாதி மணமகள் சாதியிலும் மிகக் குறைவாக மதிக்கப்பட்டது. மணமகன் வேறு இடத்தில் விவாகம் செய்திருந்தால் அதிக சீதனம் வாங்கக் கூடியதாயிருக்கும். அவன் படிப்பை மாத்திரம் கவனித்து அந்தப் பெண்ணைத் தனக்கு வாழ்க்கைத் துணைவியாய்க் கொண்டான்". எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறான கல்வி கற்ற பெண்ணின் திருமணமானது யாழ்ப்பாணச் சமூகக் கட்டமைப்பில் காணப்பட்ட சீதனம், சாதிமுறை என்பவற்றை பின்தள்ளியிருந்ததால் பெண்கள் கல்வி தொடர்பான சிந்தனை மேலும் வளர்ச்சியடையத் தொடங்கியது.

மிஷனரிகளது இவ்வாறான நடவடிக்கைகளின் காரணமாகப் பாடசாலைகளுக்கு மாணவிகளது வருகை அதிகரித்ததைத் தொடர்ந்து அவர்கள் தங்கிப்படிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கு ஆரம்பத்தில் சமூகநிலைகள் சாதகமாக இல்லாதிருந்த போதும் காலப்போக்கில் சிலர் தமது சிறுமிகளை தங்கிப் படிக்க அனுப்பியதாக அறிய முடிகின்றது. இவ்வாறு ஒன்பது சிறுமிகள் இப்பாடசாலையிற் சேர்க்கப்பட்டு வாசிப்பு, தையல், வீட்டுவேலை ஆகியவற்றில் பயிற்சியளிக்கப்பட்டனர். இவ் ஒன்பது பிள்ளைகளது வரவு மிஷனரியினர்க்கு உற்சாகத்தை ஏற்படுத்தியதுடன் பெண்களது கல்வி வளர்ச்சியில் கவனம் செலுத்தவும் காரணமாகியது.

## 9. அமெரிக்க மிஸனரியினரது பெண் விடுதிப் பா டசாலைகள்

யாழ்ப்பாணப் பெண்களது கல்வி வளர்ச்சியில் மிஷனரியினர் காட்டிய அக்கறையின் உச்ச விளைவாகவும் விடுதிப்பாடசாலை பற்றிய எண்ணக்கருவின் செயற்பாட்டினாலும் ஆசியாவின் முதல் பெண்கள் விடுதிப் பாடசாலை யாழ்ப்பாணத்தின் உடுவில் பகுதியில் 1824 இல் தோற்றம் பெற்றது. அமெரிக்கன்மிஷனைச் சேர்ந்த வண. உவின்சிலோ அவர்களும் அவரது மனைவியாருமே உடுவில் பெண் விடுதிப் பாடசாலையின் ஆரம்பகர்த்தாக்களாகத் திகழ்கின்றனர். 1820இல் உடுவிலில் பணியாற்றுவதற்கு வருகைதந்த இவர்கள் ஒல்லாந்தரது தேவாலயத்திற்கு அருகில் இருந்த வீட்டில் குடியமர்ந்து அவ்வீட்டு விறாந்தையிலே நாளாந்தப்பாடசாலையை நடாத்தி வந்தனர். அந்நாட்களில் உவின்சிலோ அம்மையாரிடம் இரு பெண்கள் நாள் தோறும் கற்றுவந்ததாகவும் ஒருநாள் அவர்கள் வீடு செல்லவேண்டிய நேரத்தில் புயல் வீசியதனால் வீடுசெல்லாது அங்கேயே தங்கிவிட்டனர். அவ்வேளை அப்பிள்ளைகளிலொன்று உவின்சிலோ அம்மையார் கொடுத்த உணவை வாங்கி உண்டதனால் அதை அறிந்த அப்பிள்ளையின் தந்தை சாப்பாட்டினைச் சாப்பிட்டு சாதிக் கட்டுப்பாட்டை அழித்தபடியால் அவர்களை ஏற்றுத் தனது வீட்டில் வசிக்க இடமளிக்க முடியாதெனவும் அவளுக்கு விவாகம் செய்து கொடுக்க முடியாது எனவும்கூறி அவர்களையே அப்பிள்ளையை வைத்துக்கொள்ளுமாறு

கூறி விட்டுச் சென்றார். அப்பிள்ளையை ஏற்றுக்கொண்ட உவின் சிலோ அம்மையார் அதற்கு கல்வி போதித்ததுடன் வேறும் சில பெண்பிள்ளைகளை இணைத்து கற்பிக்கத் தொடங்கினார். இச்சம்பவமே உடுவிற் பெண் விடுதிப் பாடசாலையின் தோற்றத்திற்கு காரணமாக அமைந் திருந்தது.

உடுவிலில் பெண்விடுதிப் பாடசாலை ஆரம்பமானதைத் தொடர்ந்து சுதேச பாடசாலையிலிருந்து வந்த 27 பெண்கள் இதன் முதல்வகுப்பில் சேர்க்கப் பட்டனர். 5 தொடக்கம் 11 வயது வரையுள்ள பெண்கள் அடங்கிய அப்பாடசாலையை உவின்சிலோ அம்மை யார் சிறப்பாக நடாத்திவந்தார். 1828ஆம் ஆண்டு 50 பிள்ளைகளும் 1837ஆம் ஆண்டு 200 பிள்ளைகளும் கல்வி பயின்றதாக இவர் தனது குறிப்பில் குறிப்பிடுகின்றார். அம்மாணவியரின் உணவு, உடை, படிப்பிற்கான செலவு ஆகியவற்றை அமெரிக்கன் மிஷனே ஏற்றுக்கொண்டது. அதேவேளை அவர்களுக்கு உதவும்வகையில் அமெரிக்காவிலிருந்த கொடை வள் ளல்கள் ஒவ்வொரு பிள்ளைக்கும் வருடா வருடம் 20 டொலர்களை அனுப்பிவந்தனர். இச்சலுகைகளைப் பெற்றுவந்த பெண்பிள்ளை களுக்கு கிறிஸ்தவப்பெயர்கள் சூட்டப்பட்டு அவர்கள் கிறிஸ்தவர்களாக மாற்றப்பட்டனர். இம்மாணவியர்கள் திருமண வயதை அடைந்த பின் அவர்களுக்கு திருமணம் நடைபெறுகின்ற சந்தர்ப்பத்தில் அவர்களுக்கான சீதனம் சீர்வரிசைகள் என்பன மிஷ னரிகளாலேயே வழங்கப்பட்டது. ஒவ்வொரு பெண்பிள்ளை களுக்குமான சீதனப்பணமாக 100 இறைகால் (75ரூபா) முதல் முப்பது ஆண்டுகளாக வழங்கப்பட்டு வந்தது. இன்றும் உடுவில் மகளிர் கல்லூரியில் கல்வி கற்கும் பெண்களுக்கு மிஷனரியினர் உதவிகிடைத்து வருவது குறிப்பிடத்தக்கது.

உடுவில் மகளிர் பாடசாலை மூலம் கல்விப்பணியை முன்னெடுத்துவந்த மிஷனரியினர் அதற்குக் கிடைத்த வரவேற்பின் காரணத்தால் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் விடுதிப்பாடசாலைகளை நிறுவும் பணியை முன்னெடுக்கத் தொடங்கினர். அவ்வகையில் யாழ்ப்பாணத்தின் கிழக்குப்பகுதியிலுள்ள தென்மராட்சி, வடமராட்சி ஆகிய பகுதிகளில் வசிக்கும் பெண்கள் கல்வி பெறும்வகையில் 1834இல் கற்சிங் அவர்களால் வரணியில் ஒரு விடுதிப்பாடசாலை நிறுவப்பட்டது. அப்பகுதியில் வசிக்கும் பெண்பிள்ளைகள் கல்விபெறவேண்டும் என்பதில் பெரியவர்கள் அக்கறை காட்டாததனால் சில பெண்பிள்ளைகள் மாத்திரமே அங்கே கல்வி கற்று வந்தனர். தொடர்ந்து அப்பாடசாலையை இயக்கிவந்த அந்தோப் அவர்களும் அவரது பாரியாரும் இறந்தபின் 1849இல் வரணிப் பெண் விடுதிப்பாடசாலை மூடப்பட்டது. எனினும் அமெரிக்கமிஷனரியினர் தமது கல்விப்பணியை தொடர்ந்து முன்னெடுத்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கமிஷனரியினரது பெண்கல்வி வளர்ச்சியின் தொடர்ச்சியாகப் பண்டத்தரிப்பில் நிறுவப்பட்ட பெண்கள் விடுதிப்பாடசாலை குறிப்பிடப்படுகின்றது. மதம்பரப்பும் நோக்குடன் யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்த முதற் கன்னிமிஷனரியான மிஸ். கில்லிஸ் அவர்கள் பண்டத்தரிப்பில் தங்கிச் சேவையாற்றிவந்த வேளை அக்கிராமத்து பெண்பிள்ளைகளின் நலன்கருதி ஒரு பெண்பாடசாலையை நடாத்தி வந்தார். தாழ்ந்த சாதிப் பெண்களும் அதில் இணைந்து விடுதியில் தங்கிப் படிப்பதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டன. 1880இல் மிஸ்.கில்லிஸ் அம்மணி அமெரிக்காவிற்கு சென் றதன் பின்னர் இப்பாடசாலை பல மாற்றங்கள் ஊடாக வளர்ச்சிகண்டு இன்றுவரை சேவையாற்றி வருவதைக் காணலாம்.

அமெரிக்க மிஷனரியினரது பெண்விடுதிப் பாடசா லைகள் வரிசையில் மற்றுமோர் பாடசாலையாக உடுப்பிட்டியில் நிறுவப்பட்ட பெண்விடுதிப் பாடசாலை திகழ்கின்றது. இது அமெரிக்க மிஷனரியான வண.கே. சி சிமித் அவர்களால் 1868இல் 17 மாணவியருடன் நிறுவப்பட்டது. அவரின் பின் பல மிஷனரிகள் பொறுப்பாக இதனை நடாத்திவந்தனர். மிஷனரியான மிஸ்தாவுன்ஸெண்ட் அம்மையாரது பொறுப்பின்கீழ் 1893 முதல் இப்பாடசாலை இயங்கி வந்த காலத்தில் மாணவியரின் தொகை அதிகரிக்கத் தொடங்கியது. இதனால் பாடசாலை மண்டபமும் பெரிதாக்கிக்கட்டப் பட்டது. 1905இல் இப்பாடசாலை உடுவில் பாடசாலை யுடன் இணைக்கப்பட்டாலும் தென்மராட்சிப் பெண் பிள்ளைகளது நலன் கருதி மீண்டும் 1908ஆம் ஆண்டு உடுப்பிட்டியில் இயங்கவைக்கப்பட்டது. மிஷனரியான உவாட் அம்மையாரின் முயற்சியினால் 1916 இல் இது சுதேச ஆங்கிலப் பாடசாலையாகத் தேர்ந்தெடுக்கப்பட் டது. இதனது 50 ஆண்டுகள் நிறைவின்போது இப் பாடசாலையில் கல்வி கற்று வெளியேறிய 70 பெண்கள் ஆசிரியர்களாகத் திகழ்ந்தனர் என அதனது 50 ஆவது அறிக்கை குறிப்பிடுகின்றது. இவ்வாறாக அமெரிக்க மிஷ னரியினர் யாழ்ப்பாணப் பெண்களது கல்வி வளர்ச்சிக்காக முதன்முதல் பெண்கள் விடுதிப் பாடசாலைகளை யாழ்ப்

பாணத்தில் நிறுவியதன் ஊடாக யாழ்ப்பாணக் கல்வி வரலாற்றில் பெரும் திருப்புமுனையை ஏற்படுத்தியிருப் பதைக் காணலாம்.

## 10. அமெரிக்க மிஷனரியினரின் பெண்களுக்கான ஆசிரியர் பயிற்சிக்கல்லூரிகள்

அமெரிக்க மிஷனரியினர் தமது கல்லூரியில் கல்வி கற்று வெளியேறியவர்களைத் தமது கிராமப் பாடசாலைகளில் ஆசிரியர்களாக நியமித்திருந்தனர். இவர்களுக்கு ஆசிரியர் பயிற்சியை வழுங்குவதற்காக 1885 ஆம் ஆண்டு உடுவிலிலும், 1886 ஆம் ஆண்டு வேம்படியிலும் மூன்றாண்டு பயிற்சித் திட்டங்கள் கொண்ட ஆசிரியர் பயிற்சிப் பாடசாலைகளை நிறுவி இப்பெண்களுக்கு ஆசிரியர் பயிற்சி வழங்கி அவர்களை சிறந்த ஆசிரியர்களாக உருவாக்கி வந்தனர் இவ் வகை யில் யாழ்ப்பாணப் பெண்கள் கல்வி கற்பதோடு மட்டும் நின்றுவிடாது கற்பித்தலிலும் ஈடுபடத் தக்கவிதமாக மிஷ னரியினர் பெண்கல்வி வளர்ச்சிக்கு பங்காற்றியிருப்பது அவர்கள் பெண்க ளது கல்வியில் தீவிர கவனம் செலுத்திய தற்கான எடுத்துக்காட்டாகவே விளங்குகின்றது.

அமெரிக்கமிஷனரியினர் பெண்களது கல்வி வளர்ச் சியில் பெரும் பங்காற்றியது போன்று யாழ்ப்பாணத்தில் மதப்பரப்புரைகளில் ஈடுபட்டுவந்த வெஸ்லியன் மிஷ னரியினர், திருச்சபைமிஷனரியினர், கத்தோலிக்க மிஷனரி யினர் ஆகியோரும் பணியாற்றியிருப்பதைக் காணலாம். வெஸ்லியன் மிஷனரியினர் பெண்களது கல்வியில் அக்கறை செலுத்தினர் என்பதை அம்மிஷனைச் சேர்ந்த வண. பீற்றர் பேர்சிவலாலும் அவர் மனைவியாலும் 1838 இல் யாழ்வேம்படியில் மகளிர் விடுதிப்பாடசாலை நிறுவிப் பெண்பிள்ளைகளுக்கு கல்விபோதித்து வந்ததன் மூலம் அறியமுடிகின்றது. இம்மகளிர் விடுதிப்பாடசாலையே தற்போதய பிரபல வேம்படி மகளிர் கல்லூரியாகும். மேலும் அவர்கள் நகரின் அருகிலுள்ள தட்டா தெருவிலும், தச்சதெருவிலும் பெண்களுக்கென பாடசாலைகளை நிறுவியிருந்தனர். மேலும் வண்ணார்பண்ணை, ஆரியகுளம் ஆகிய பகுதிகளில் பாடசாலைகளை நிறுவி அங்கு ஆண்களுடன் பெண்களையும் இணைத்து கல்விபெற வைத்தனர். வெஸ்லியன் மிஷனரியினரும் யாழ்ப்பாணப் பெண்கள் உயர்கல்வி பெறவேண்டும் என்ப தில் அக்கறைகொண்டு பருத்தித்துறையில் உயர்தரப் பெண் விடுதிப்பாடசாலையை நிறுவிக் கல்விப்பணியை முன்னெடுத்துவந்ததை அறிய முடிகின்றது.

யாழ்ப்பாணத்தில் பணியாற்றிய திருச்சபை மிஷ னரியினரும் பெண்களது கல்வி வளர்ச்சியில் அக்கறை செலுத்தியிருப்பதைக் காணலாம். இம்மிஷனரியைச் சேர்ந்த திரு. காட்டரும் அவரது பாரியாரும் பெண்களது கல்வியில் அக்கறை கொண்டு அவர்களுக்குக் கல்வி போதிப்பதற்காக 1896இல் ஒன்பது மாணவிகளுடன் சுண்டுக்குளிப் பகுதியில் ஆங்கிலப் பாடசாலையை ஆரம்பி த்திருந்தனர். இதுவே சுண்டுக்குளி மகளிர் கல்லூரியின் தோற்றத்திற்கு காரணமாய் அமைந்தது. இவ் ஆங்கிலப் பெண்கள் கல்லூரி யாழ்ப்பாணப் பெண்களது கல்வி வளர்ச் சியில் இன்றுவரை பெரும்பங்காற்றி வருவது குறிப்பி டத்தக்கது.

யாழ்ப்பாணத்தில் பணியாற்றிய கத்தோலிக்க மிஷ னரியினரும் யாழ்ப்பாணப் பெண்களது கல்வி வளர்ச்சியில் அக்கறை செலுத்தியிருப்பதைக் காணலாம். இம்மிஷ னைச்சேர்ந்த வண. பேற்றாச்சிரி ஆண்டகையார் யாழ்ப் பாணப் பெண்களது கல்வி வளர்ச்சிக்காற்றிய பங்க ளிப்பு குறிப்பிடத்தக்கது. இவரது முயற்சியின் பயனாய் யாழ்ப் பாணப் பெண்களுக்கு கல்வி போதிக்க வென 1845இல் திருக்குடும்ப கன்னியர்மடப் பாடசாலை நிறுவப்பட்டது. தொடர்ந்து யாழ்ப்பாணப் பெண்களது கல்வியறிவை வளர்க் கும் வகையில் ஆறு கன்னியாஸ்திரிகளை வரவழை த்து தமது பணிகளை விஸ்தரித்துவந்தனர். இவர்கள் யாழ்ப்பாணப் பெண்களுக்கு கல்வி புகட்டியதுடன் இப் பெண்களை கன்னியாஸ்திரிகளாகவும் பயிற்றுவித்து வந்தனர். இக்கன்னியாஸ்திரிகள் கிராமப் புறங்களில் பாடசாலைகளை நிறுவி பெண்பிள் ளைகளுக்கு கல்வி போதித்துவந்தனர். அவ்வகையில் இவர்களால் இள வாலை திருக்குடும்பகன்னியர் மகாவித்தியாலயம், பருத்தித்துறை திருக்குடும்ப கன்னியர் பாடசாலை, நெடுந் தீவு திருக்குடும்ப கன்னியர் பாடசாலை என்பன நிறுவப் பட்டு கல்விப் பணிகள் முன்னெடு க்கப்பட்டு வந்தன. இவை இன்றும் யாழ்ப்பாணப் பெண்களது கல்வி வளர்ச் சிக்கு பங்காற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

## 11. மிஷனரியினரது கல்வி நடவடிக்கைகளுக்கு எதிரான சுதேசிகளது பெண்கள் கல்வி

மிஷனரியினரது கல்வி நடவடிக்கைகளால் கிறிஸ்தவச் செல்வாக்கு அதிகரித்து வருவதையும் அதனால் இந்துகள் பாதிக்கப்பட்டு வருவதையும் அவதானித்த இந்துப் பெரியார்கள் இதற்கெதிராகச் செயற்படத் தொடங்கினர். இவர்களுள் ஆறுமுகநாவலர், சோ.பொன்.இராமநாதன் ஆகியோரது பணிகள் குறிப்பிடத்தக்கன. ஆறுமுகநாவலரும்

அவரது சீடர்களும் கிறிஸ்தவமதத்திற்கெதிராகப் பணிய ாற்றிய அதேவேளை இந்துமாணவர்கள் கற்பதற்காக இந்துப்பாடசாலைகளையும் நிறுவி வந்தனர். அதன் தொடர்ச்சியாகவே அவர்களால் இந்து மாணவர்களுக்கென 1889இல் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி நிறுவப்பட்டு கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவந்தன. இவர்களது இச்செயற்பாடுகளால் இந்துக்கல்வி மரபு மீண்டும் வளரத் தொடங்கியது. இவ்வாறான சூழ்நிலையிலேயே யாழ்ப்பா ணப் பெண்களது கல்வியிலும் தீவிர கவனம் செலு த்தத்தொடங்கினர். இதில் இராமநாதன் அவர்களது பங்களிப்பு அளப்பரியதாகும். இவரது பங்களிப்பின் கார ணமாக 1913 இல் மருதனார்மடத்தில் சைவத்தமிழ்ப் பெண் களுக்கென இராமநாதன் மகளிர் கல்லூரி ஆரம் பிக்கப்பட்டது (நேர்காணல்:சிற்றம்பலம்.சி.க). மேலும் பெண்கள் உயர்கல்வி பெறவேண்டும். அவர்கள் ஆசிரி யர்களாக வரவேண்டும் என்ற நோக்கில் ஆசிரிய கலாசாலையையும் நிறுவும் முயற்சியில் ஈடுபட்டார். அதன்படி 1926இல் ஆசிரிய கலாசாலையை நிறுவி பெண்களது கல்வித் தேவையை பூர்த்திசெய்து வந்தார். இதுவே இலங்கையில் முதன்முதல் நிறுவப்பட்ட சைவப் பெண்களுக்கான ஆசிரிய கலாசாலை ஆகும்.

இவ்வாறு சுதேசிகள் பெண்களது கல்வி வளர்ச்சியில் காட்டிய அக்கறையின் விளைவாக யாழ்ப்பாண நகரில் 1943 இல் இந்து மகளிர் கல்லூரியும் 1944 ஆம் ஆண்டில் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியும் தோற்றம் பெற்றன. இவ்வகையில் மிஷனரியினரது பெண்கல்விப் பணிக் கெதிராகச் சுதேசிகள் பெண்களது கல்வி வளர்ச்சிக்குக் காட்டிய அக்கறையால் யாழ்ப்பாணத்தில் இந்து மகளிர் கல்லூரிகள் தோற்றம் பெற்று யாழ்ப்பாணப் பெண்களது கல்வி வளர்ச்சிக்கு இன்றுவரை பங்களிப்பாற்றி வரு வதைக் காணலாம்.

## 12. முடிவுரை

பெண்கள் கல்வியில் அக்கறை கொண்டு அமெரிக்க மிஷ னரியினர் செயற்பட்டமையானது அக்கால சமூக நிலையில் அவர்கள் முன்னேற்றம் அடைவதற்கான வழியாகவே அமைந்திருந்தது. இவ்வகையில் அமெரிக்கமிஷனரியினர் யாழ்ப்பாணப் பெண்களது கல்வி வளர்ச்சிக்காகப் பல பாடசாலைகளையும், விடுதிப் பாடசாலைகளையும் நிறுவி ஆரம்பக்கல்விமுதல் உயர்கல்விவரை கல்விபெறுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தியிருந்தனர். மிஷனரியினர் ஆரம்பித்து வைத்த இப்பணி ஏனைய மிஷனரியினராலும், சுதேசி களாலும் முன்னெடுக்கப்பட்டதைத் தொடர்ந்து பெரு வளர்ச்சியடையத் தொடங்கியிருந்தது. இவ்வாறு பெண் கள் கல்வியில் அக்கறை கொண்டு அமெரிக்கமிஷனரி யினர் மட்டுமன்றி ஏனையோரும் செயற்பட்டதைத் தொடர்ந்து யாழ்ப்பாணப் பெண்கள் கல்வியில் சிறந்து விளங்கி ஆண்களுக்கு நிகராக ஆசிரியர்களாகவும், நிர்வாகிகளாகவும், மருத்துவிச்சிகளாகவும் உருவாகும் வாய்ப்பைப் பெற்றுக்கொண்டனர். இவர்கள் ஆரம்பித்து வைத்த பணிகளை இன்றும் அவர்களால் நிறுவப்பட்ட பாடசாலைகள் தொடர்ந்து முன்னெடுத்து வருவதைக் காண முடிகின்றது. இவ்வகையில் அமெரிக்க மிஷனரி யினர் யாழ்ப்பாணப் பெண்கள் சமூகரீதியில் முன்னேற் றமடைவதற்கு சிறந்ததோர் ஆரம்பத்தை வழங்கியிருக் கிறார்கள் என்றால் அது மிகையாகாது.

## உசாத்துணை

[1] சசிகலா.கு. யாழ்ப்பாணத்தில் பெண் கல்வியின் தோற் றமும் வளர்ச்சியும், சேமமேடு பதிப்பகம், கொழும்பு. பக் 84-91,2012

[2] சிவலிங்கராசா. என். சரஸ்வதி.சி. 19 ஆம் நூற்றா ண்டில் யாழ்ப்பாணத்துத் தமிழ்க் கல்வி, குமரன் புத்தக இல்லம், கொழும்பு.ப. 2 , 2008.

[3] சிவலிங்கராசா. என்(1983,) "யாழ்ப்பாணக் குடா நாட்டில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் நிலவிய பாரம்பரியக் கல்வி முறை", சிந்தனை, தொகுதி-I, இதழ்-II. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

[4] சிறிகைலாயினி.ச. 'சுண்டுக்குளி மகளிர் கல்லூரி யும் யாழ்நகர சமூகமும்', பட்டப்பின் படிப்பிற்கான தகுதியைப் பூர்த்தி செய்யும்முகமாக சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1983.

[5] வள்ளிநாயகி,இ. யாழ்ப்பாணச் சமூகத்தில் பெண் கல்வி ஓர் ஆய்வு, குமரன் புத்தக இல்லம், கொழும்பு,ப 6,2006.

[6] விக்னேஸ்வரி,கலைக்கேசரி, வீரகேசரி எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்(சிலோன் பிறைவேட் லிமிட்டட், பக்.136-1422012.

[7] வேலுப்பிள்ளை.சி.டி.,அமெரிக்க இலங்கை மிசன் சரித்திரம், இலங்கை மிசன்அச்சகம், தெல்லிப்பளை, பக். 7-180,1922.

[8] ரஞ்சித்.பேரு. "பிரித்தானியரின் ஆரம்பகாலக் கல்வி முயற்சிகள்", இலங்கையிற் கல்வி நூற்றாண்டு விழா மலர், பகுதி II, அரசாங்க அச்சகம், கொழும்பு. 1962.

[9] ஜெபநேசன்,எஸ். , அமெரிக்கமிஷனும் இலங்கையில் தமிழ் வளர்ச்சியும், யாழ்ப்பாணக்கல்லூரி, வட்டுக் கோட்டை, பக்.6-30,1983.

[10] ஜெபநேசன்.எஸ் , இலங்கைத்தமிழர் சிந்தனை வளர்ச்சியில் அமெரிக்கமிஷன், குமரன் புத்தக இல்லம், கொழும்பு, ப.3, 2009.

[11] அம்பலவாணர்,இரா. நெஞ்சின் அலைகள், திருமதி ஹரியட் வாடஸ்வேர்த் வின்சிலோ, சமய சமூக ஆய்வுக்கான கிறிஸ்தவமையம், சுன்னாகம்,ப. 57,1835.

[12] ஜெயராசா,சபா. யாழ்ப்பாணத்து மரபுக் கல்வியும் பண்பாடும், சேமமேடு பதிப்பகம், கொழும்பு, ப.41,2009.

[13] Harrison Minnie Hastings. Uduvil 1824-1924, Being the History of one of the oldest girls school in Asia, American Ceylon mission press, p.12,1925.

[14] The one Hundred Annual Report of the Ceylon, Mission of the American Board,p.39, 1916.

[15] Scowofort Elise. At thc Foot of the Vcmbu Tree, A History of The Vembadi School for the past hundred yea rs, Santiagopillai Press, Colombo,1938.